# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 30 | 4 Pages | 31.08.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 30 | 4 பக்கங்கள் | 31.08.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று மும்பை பயணம்

சென்னை,ஆக.31

பாரதிய ஜனதா மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் சார்பாக பிரதமர் வேட்பாளராக மீண்டும் மோடி நிறுத்தப்படுகிறார். கூட்டணியின் 3வது கூட்டம் இன்றுயும், இன்று மறுநாளும் மும்பையில் நடைபெற உள்ளது. பாராளுமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் போட்டியிட ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் இப்போதே தங்களை தயார்படுத்தி வருகிறது. பாரதிய ஜனதா மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் சார்பாக பிரதமர் வேட்பாளராக மீண்டும் மோடி நிறுத்தப்படுகிறார். ஆனால் காங்



கிரஸ் கூட்டணி சார்பில் பிரதமர் வேட்பாளர் யார் என்று இன்னும் முடிவு செய்யப்படாமல் உள்ளது. இந்த சூழலில் மத்தியில் ஆட்சியில் உள்ள பா.ஜனதாவுக்கு எதிராக காங்கிரஸ், தி.மு.க. உள்பட 16 கட்சிகள் இணைந்து இந்தியா என்ற பெயரில் கூட்டணியை உருவாக்கி உள்ளன. இந்த கூட்டணியின் முதல் கூட்டம் பீகார் மாநிலம் பாட்னாவில் நடந்தது. இரண்டாவது கூட்டம் பெங்களூருவில் நடந்தது. இந்த கூட்டத்தில் தான் எதிர்க்கட்சிகள் கூட்டணிக்கு இந்தியா என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த கூட்டணியின் 3வது கூட்டம் இன்றுயும், இன்று மறுநாளும் மும்பையில் நடைபெற உள்ளது. இதில் 16 கட்சித் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். இக்கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு அறிவிக்க வாய்ப்புள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறி வருகிறார். அத்துடன் பிரதமர் வேட்பாளர் குறித்தும் ஆலோசித்து முடிவு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை 9.40 மணிக்கு விமானத்தில் மும்பை புறப்பட்டுச் செல்கிறார். வியாழன், வெள்ளிக்கிழமைகளில் மும்பையில், இந்தியா கூட்டணி கூட்டத்தில் பங்கேற்கும் அவர் பிரதமர் வேட்பாளர் குறித்து வலியுறுத்தி பேசுவார் என தெரிகிறது. கூட்டம் முடிந்ததும் 1ந் தேதி இரவு அவர் சென்னை திரும்ப திட்டமிட்டுள்ளார்.

## சீனாவில் காதலிக்கு கொடுத்த உதட்டு முத்தத்தால் காது கேட்கும் திறனை இழந்த காதலன்

பெய்ஜிங்,ஆக.31

காதலர்கள் தங்களது அன்பைப் பரிமாறிக் கொள்ளும் மவுனமொழியே முத்தம். காதலர்கள் முத்தமிட்டுக் கொள்வதில் லிப்லாக் முத்தம் கொடுக்கும்போது, உடலில் குறிப்பாக நரம்பு மண்டலங்களில் நிறைய மாற்றங்கள் நிகழ்கின்றன. அவை நல்ல மாற்றங்களை உடலில் ஏற்படுத்துகின்றன. என்றாலும் அதிலும் பல்வேறு பாதிப்புகளும் இருக்கத்தான் செய்கின்றன. சீனாவை சேர்ந்த ஒரு இளம் காதல் ஜோடி அடிக்கடி பல இடங்களுக்கு சென்று தங்களின் காதலை வளர்த்து வந்தனர். இந்தநிலையில் இருவரும் சீனாவின் கிழக்கு ஜெஜியாங் மாகாணத்தில் உள்ள ஏரிப்பகுதிக்கு சென்றனர். அப்போது அங்கு இருவரும் 'லிப்லாக்' எனப்படும் உதட்டு முத்தம் கொடுத்துள்ளனர். இருவரும் உதட்டோடு உதட்டை வைத்து சுமார் 10 நிமிடங்களுக்கு விடாமல் முத்தம் கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது. இந்தநிலையில் திடீரென்று காதலனின் காதில் ஊசி குத்துவது போன்று வலி ஏற்பட்டுள்ளது. இதுபற்றி அவர் தனது காதலியிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து உதட்டு முத்தத்தை நிறுத்திவிட்டு அவர்கள் இருவரும் அங்கேயே சிறிது நேரம் அமர்ந்துள்ளனர். ஆனால் காதலனின் காதில் ஏற்பட்ட வலி நேரம் செல்ல செல்ல அதிகரித்ததோடு, அவரின் கேட்கும் திறனும் குறைந்துள்ளது. இதையடுத்து உடனடியாக இருவரும் மருத்துவ மனைக்கு சென்றனர். அங்கு காதலனுக்கு டாக்டர்கள் பரிசோதனைகள் மேற்கொண்டனர். அப்போது அவரது காதின் நடுப்பகுதியில் இருந்து வெளிப்புற பகுதியை பிரிக்கும் சிறிய மெல்லிய சவ்வு போன்ற பகுதியில் சிறு அளவிலான 2 துளைகள் இருப்பது தெரியவந்தது. அதுதான் அவரது காது வலிக்கு காரணம் என்பதை டாக்டர்கள் கண்டறிந்தனர். உணர்ச்சிவசப்பட்டு கொடுக்கும் முத்தம் காதுக்குள் காற்றழுத்தத்தில் விரைவான மாற்றத்திற்கு வழிவகுக்கும் என்றனர். இதையடுத்து டாக்டர்கள் அவருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். அவர் முழுமையாக குணமடைய 2 மாதங்கள் ஆகும் என்று தெரிவித்துள்ளனர். காதலன் காதலிக்கு கொடுத்த உதட்டு முத்தத்தால் காது கேட்கும் திறனையே இழந்த சம்பவம் காதலர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

## சிறை தண்டனைக்கு பயந்து தற்கொலை செய்து கொண்ட ராணுவ தளபதி



சிலி,ஆக.31

அல்லெண்டே ஆட்சியை விட்டு அகற்றி ஆட்சியில் அமர்ந்தார் பினோசெட் ஜராவின் கை விரல்கள் பூட்ஸ் கால்களால் நசுக்கப்பட்டது. தென்அமெரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள நாடு சிலி. 1973 செப்டம்பரில் இங்கு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி கட்சியை சேர்ந்த சால்வடோர் அல்லெண்டே எனும் அதிபரின் ஆட்சியை, அமெரிக்க உளவுத்துறை அமைப்பான சி.ஐ.ஏ.வின் மறைமுக துணையுடன் ராணுவ கிளர்ச்சி மூலம் அகற்றி விட்டு, ராணுவ தலைவர் அக்ஸ்டோ பினோசெட் ஆட்சியை கைப்பற்றினார். பிறகு பினோசெட் சுமார் 16 ஆண்டுகள் சிலியில் ஆட்சி புரிந்தார். அல்லெண்டேவின் தீவிர ஆதரவாளர் பாடகர் விக்டர் ஜரா. அமைதி வழிகளிலேயே பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பதை தனது லத்தீன் அமெரிக்க பாடல்கள் மூலம் நாட்டு மக்களுக்கு பிரசாரம் செய்து மிகவும் பிரபலமடைந்தவர் ஜரா. மேற்கத்திய பாடல் குழுக்களான யூ2 மற்றும் பாடகர்கள் பாப் டைலன் மற்றும் ப்ரூஸ் ஸ்ப்ரிங்ஸ்டீன் ஆகியோருக்கும் இவர் முன்னுதாரணமாக இருந்தார். 1973 கிளர்ச்சியும் ஆட்சி மாற்றமும் நடந்த சில தினங்களில், செப்டம்பர் 11 அன்று பினோசெட்டின் படையால் பாடகர் ஜரா கைது செய்யப்பட்டார். அப்போது பினோசெட் அரசால் சிறை பிடிக்கப்பட்ட சுமார் 5 ஆயிரம் அரசியல் கைதிகளுடன் ஒரு விளையாட்டு அரங்கத்தில் ஜராவும் சிறை வைக்கப்பட்டு, சித்ரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டார். கிட்டார் வாசிப்பதிலும் வல்லவரான அவரது கை விரல்கள் துப்பாக்கியின் பின்புறத்தாலும், பூட்ஸ் கால்களாலும் நசுக்கப்பட்டது. அவர் உடலில் 44 இடங்களை துப்பாக்கி குண்டுகள் துளைத்தது. 1990 வரை பினோசெட் ஆட்சியில் இருந்தார். பின்பு ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டார். போர் குற்றங்களுக்காக, பினோசெட் ஆட்சியின் பல ராணுவ அதிகாரிகள் மற்றும் பினோசெட் ஆதரவாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வந்தது. இதில் பாடகர் விக்டர் ஜராவின் கொலைக்கான விசாரணையும் அடங்கும். பினோசெட் செய்த அரசியல் கொலைகளுக்காக தண்டனை பெறாமலேயே 2006இல் உயிரிழந்தார். ஆனாலும் அவருக்கு துணை நின்ற ராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்கள் மீது போர்குற்றம் புரிந்ததற்கான வழக்கு விசாரணை தொடர்ந்து நடந்தது. இதில் விக்டர் ஜராவை சித்ரவதை செய்து கொலை செய்த சிலி நாட்டின் அப்போதைய ராணுவ தளபதியாக இருந்த 85வயதான ஹெர்னன் சகோன் மற்றும் அவருக்கு துணையாக இருந்த 7 ராணுவ வீரர்கள் ஆகியோரை "குற்றவாளிகள்" என இருதினங்களுக்கு முன்பு அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவர்களுக்கு 25 ஆண்டு கால சிறை தண்டனை வழங்கப்பட்டது. இதனையடுத்து ஹெர்னனை சிறைக்கு அழைத்து செல்ல அதிகாரிகள் அவர் வீட்டுக்கு சென்ற போது ஒரு துப்பாக்கியை எடுத்து தன்னைத்தானே சுட்டுக்கொண்டு ஹெர்னன் உயிரிழந்தார். பல வருடங்கள் ஆனாலும், விக்டர் ஜராவின் அநியாய மரணத்திற்கு நீதி வழங்கப்பட்டு விட்டதாக அவரது ஆதரவாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அமெரிக்காவை நரகத்தை நோக்கி நகர்த்துகிறார் பைடன்: டொனால்ட் டிரம்ப் விமர்சனம்



அமெரிக்கா,ஆக.31

டிரம்ப் சிறப்பான தோற்றமுடையவர் என பைடன் தெரிவித்தார் திறமையற்றவர் ஜோ பைடன் என டிரம்ப் தாக்கினார் . அமெரிக்காவின் 45வது அதிபராக 2017இல் இருந்து 2021 வரை பதவியில் இருந்தவர் குடியரசு கட்சியை சேர்ந்த டொனால்ட் டிரம்ப் (77). அமெரிக்காவில் 2024 இல் மீண்டும் அதிபர் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், தற்போதைய அதிபரான ஜனநாயக கட்சியை சேர்ந்த ஜோ பைடனும், அவருக்கு போட்டியாக களமிறங்க துடிக்கும் டொனால்ட் டிரம்பும் ஒருவரையொருவர் சமீப காலமாக கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர். சில நாட்களுக்கு முன் ஒரு வழக்கில் சிறை சென்று சில மணி நேரங்களில் பிணையில் வெளி வந்தார் டொனால்ட் டிரம்ப். அப்போது சிறைச்சாலை விதிமுறைகளின்படி "மக்ஷாட்" எனப்படும் புகைப்படம் எடுக்கப்பட்டார். அந்த புகைப்படங்களை டிரம்ப் தனது சொந்த வலைதளத்தில் அனைவரின் பார்வைக்கும் வெளியிட்டிருந்தார். இந்த புகைப்படம் குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடனிடம் கேள்வி கேட்கப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் போது, "நான் அதனை தொலைக்காட்சியில் பார்த்தேன். டிரம்ப் சிறப்பான தோற்றமுடையவர்" என டிரம்பை கேலி செய்யும் விதமாக ஜோ பைடன் தெரிவித்திருந்தார். இந்நிலையில் டிரம்ப், பைடனை விமர்சித்து பேசும் ஒரு வீடியோ வெளியாகியுள்ளது. அதில், "கெட்ட எண்ணம் படைத்தவர் ஜோ பைடன். அவர் திறமையற்றவர் மட்டுமல்ல, சீரான மனநிலையை இழந்தவர் என நான் நம்புகிறேன். நாட்டு மக்களை அச்சுறுத்தும் விதமாக நாட்டின் எல்லைகளை அனைவருக்கும் திறந்து வைத்திருக்கிறார். நீதித்துறையையும், மத்திய புலனாய்வு துறையையும் அவர் சரியாக கையாளவில்லை. மனநிலையை இழந்தவராக நாட்டை நரகத்தை நோக்கி நகர்த்தி, ஒரு காரணமும் இல்லாமல் அமெரிக்க மக்கள் மீது 3வது உலகப்போரை திணித்து விடுவார்" என்று டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார். பல்வேறு நீதிமன்ற வழக்குகளை சந்தித்து வரும் டிரம்பிற்கும், பைடனுக்குமான கருத்து மோதல்கள், தேர்தல் நெருங்க நெருங்க எந்த நிலையை எட்டும் என அரசியல் வல்லுனர்கள் ஆர்வமுடன் எதிர்நோக்கியுள்ளனர்.

## சூரிய ஒளி மின் தகடுகளில் தீ விபத்து

பல்லடம்,ஆக.31

மின்சாரப் பயன்பாட்டை குறைக்கும் வகையில் சூரிய ஒளி மின் தகடுகள் பொருத்துவதற்காக திட்டமிட்டனர். தீ மளமளவென பரவி சூரிய ஒளி மின் தகடுகளில் தீ பற்றியது. பல்லடம் பொள்ளாச்சி பைபாஸ் ரோடு பகுதியில் தனியாருக்கு சொந்தமான டெக்டைல்ஸ் நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிலையில் மின்சாரப் பயன்பாட்டை குறைக்கும் வகையில் சூரிய ஒளி மின் தகடுகள் பொருத்துவதற்காக திட்டமிட்டனர். இதற்காக சூரிய மின் ஒளி தகடுகள் வாங்கி இருப்பு வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பொருத்தும் வேலைகள் நடைபெற்று வந்ததாக கூறப்படுகிறது. டெக்டைல்ஸ் நிறுவனத்தில் உள்ள காலி இடத்தில் சூரிய ஒளி மின் தக




டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நேற்று மாலை அந்த இடத்தில் அருகே இருந்த காய்ந்த புற்களில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ மளமளவென பரவி சூரிய ஒளி மின் தகடுகளில் தீ பற்றியது. தீப்பிடித்து எரிவதை கண்ட தொழிலாளர்கள், இது குறித்து தீயணைப்புத் துறையினருக்கு தகவல் அளித்தனர். இதையடுத்து சம்பவ இடம் வந்த தீயணைப்பு துறையினர் தண்ணீரை பீய்ச்சி அடித்து சூரிய ஒளியில் மின் தகடுகளில் பற்றி எரிந்த தீயினை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இதற்குள் அங்கிருந்த ஏராளமான சூரிய ஒளி மின் தகடுகள் தீயில் இருந்து சேதம் ஆகியது. இதன் மதிப்பு பல லட்சம் ரூபாய் இருக்கலாம் என கூறப்படுகிறது. இந்த தீ விபத்து குறித்து பல்லடம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## ஊத்துக்குளியில் பனியன் நிறுவன கட்டிட சுவர் இடிந்து 4 பேர் காயம்

பெருமாநல்லூர்,ஆக.31

3000 சதுர அடியில் ஹாலோ பிளாக் கற்களை கொண்டு ஒரே கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது. ஊத்துக்குளி போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. திருப்பூரில் இருந்து ஊத்துக்குளி செல்லும் சாலையில் உள்ள கூலிபாளையம் பகுதியில் தனியார் பனியன் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு 3000 சதுர அடியில் ஹாலோ பிளாக் கற்களை கொண்டு ஒரே கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது. மேற்கூரையில் அலுமினிய தகடுகளால் ஆன கூலிங் சீட் அமைக்கப்பட்டுள்ளது.



இதில் கட்டிங், டெய்லரிங், அயர்னிங் என அனைத்தும் ஒரே கூரையின் கீழ் செயல்பட்டு வந்தது. இந்த நிறுவனத்தில் வடமாநில தொழிலாளர்கள் மற்றும் தமிழ்நாட்டு தொழிலாளர்கள் என 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில் வழக்கம்போல் நேற்றும் (செவ்வாய்க்கிழமை) பணிக்கு வந்த தொழிலாளர்கள் தங்களது அன்றாட வேலைகளை மேற்கொண்டனர். தொடர்ந்து மாலை வேளையில் டீ அருந்துவதற்கான இடைவேளையில் அனைவரும் வெளியே உள்ள கடைக்கு சென்று உள்ளனர். 10க்கும் மேற்பட்டோர் பனியன் நிறுவனத்திற்குள் இருந்து பணியை செய்து வந்தனர். அப்போது கனமழையோடு கூடிய சூறைக்காற்று வீசியதில், அலுமினியத்தால் ஆன தகர கொட்டகை, காற்றில் பறந்தது. மேலும் பலத்த சூறைக் காற்றின் வேகம் தாங்காமல் பனியன் நிறுவனத்தின் ஹரலோ பிளாக் சுவர்கள் சரிந்து விழுந்து விபத்துக்குள்ளானது. திடீரென நடந்த இந்த விபத்தில் பனியன் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த 10க்கும் மேற்பட்டோர் உள்ளே சிக்கிக் கொண்டனர். இது குறித்து ஊத்துக்குளி போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு துறையினர் மற்றும் போலீசார் இடிபாடுகளை அகற்றி உள்ளே சிக்கி இருந்தவர்களை மீட்டனர் .இதில் 4 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. அவர்களை ஆம்புலன்ஸ் மூலம் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இது குறித்து ஊத்துக்குளி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## வெள்ளகோவிலில் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்து டிரைவர் பலி

வெள்ளகோவில்,ஆக.31



குமாரை மீட்டு காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்றனர். வெள்ளகோவில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வெள்ளகோவில் அருகே உள்ள தீத்தாம்பாளையத்தை சேர்ந்தவர் குமார் (வயது 48). இவர் காங்கயம் அரசு போக்குவரத்து கழக கிளையில், அரசு பஸ் டிரைவராக வேலை செய்து வந்தார். நேற்று மாலை மோட்டார் சைக்கிளில் தனது மகள் யாழினியை (15) பின் இருக்கையில் உட்கார வைத்துக் கொண்டு வெள்ளகோவில், அய்யனூர் ரோட்டில் வந்து கொண்டு இருந்தார். அப்போது திடீர் என நிலை தடுமாறி மோட்டார் சைக்கிள் கீழே விழுந்தது. இதில் பின்னால் அமர்ந்திருந்த யாழினிக்கு லேசான காயம் ஏற்பட்டது. குமார் பலத்த காயம் அடைந்தார். அந்த பகுதியை சேர்ந்தவர்கள் குமாரை மீட்டு காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்றனர். ஆனால் குமார் ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து வெள்ளகோவில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இறந்து போன குமாருக்கு சங்கீதா என்ற மனைவியும், யாழினி என்ற மகளும், பூவேந்திரன் என்ற மகனும் உள்ளனர்.

## பாராளுமன்ற தேர்தலில் 40 தொகுதியிலும் அ.தி.மு.க., கூட்டணி வெற்றி பெறும் பொள்ளாச்சி ஜெயராமன் பேச்சு

திருப்பூர்,ஆக.31



திருப்பூர் மாநகர் மாவட்ட அ.தி.மு.க., நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று கட்சி அலுவலகத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி ஜெயராமன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் விஜயகுமார் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., குணசேகரன், அவைத்தலைவர் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி ஜெயராமன் எம்.எல்.ஏ., பேசியதாவது: சென்னை மாநகராட்சிக்கு இணையாக திருப்பூர் மாநகராட்சிக்கும், திருப்பூர் மாநகராட்சியை விட அதிகமாக பொள்ளாச்சி நகராட்சிக்கு வரி விதிப்பு நடைபெற்று வருகிறது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தி.மு.க. அரசு பொறுப்பேற்ற நாள் முதல் வெறும் வார்த்தைகளால் மட்டும் ஆட்சி நடக்கிறது. மின் கட்டண உயர்வால் திருப்பூர் பின்னலாடை தொழில் மிகவும் நலிவடைந்து வரக்கூடிய நிலையில் அதனை மீட்டெடுக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தி.மு.க., ஆட்சி வரும் போதெல்லாம் தொழில்துறையினர் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். மதுரையில் நடைபெற்ற மாநாடு மக்கள் எழுச்சி மாநாடாக அமைந்தது. மக்கள் தன்னெழுச்சியாக திரண்டு வந்தார்கள். எடப்பாடி பழனிச்சாமி நினைத்தால் மட்டும்தான் அதுபோன்று இன்னொரு மாநாட்டை நடத்த முடியும்.

வருகிற பாராளுமன்ற தேர்தலில் தமிழகம், புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் மத்தியில் பிரதமர் மோடி மீண்டும் ஆட்சி அமைப்பது தான் இந்தியாவிற்கு பாதுகாப்பு . எம்ஜிஆர்., அறிமுகப்படுத்தி கொண்டு வரப்பட்ட சத்துணவு திட்டத்தில் எம்ஜிஆரின் பெயரை இருட்டடிப்பு செய்யும் வகையில் தி.மு.க. வேறொரு பெயரினை வைத்து மறைத்து வருகிறது.

இதே நிலை தொடருமானால் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மிகப்பெரிய போராட்டம் நடைபெறும் . இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் அ.தி.மு.க. மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி, பகுதி செயலாளர்கள் கருணாகரன், பட்டிலிங்கம், ஹரிஹரசுதன், கே.பி.ஜி. மகேஷ்ராம், கேசவன், பி.கே. முத்து, திலகர் நகர் சுப்பு, மற்றும் ஜெயலலிதா பேரவை தலைவர் அட்லஸ் லோகநாதன், வர்த்தக அணி செயலாளர் எஸ்.பி.என். பழனிச்சாமி, மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# குடிமங்கலம் பகுதியில் மகளிர் உரிமை திட்ட பணிகளை கலெக்டர் ஆய்வு



குடிமங்கலம்,ஆக.31

விண்ணப்ப பதிவு முகாம்கள் 2 கட்டமாக நடைபெற்றது. விண்ணப்பங்கள் பதிவு செய்தது குறித்து சரி பார்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவட்டம் பல்லடம் வட்டம் குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் உடுமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விண்ணப்பம் பதிவு செய்தது குறித்து சரி பார்க்கும்பணிகளைகலெக்டர் கிறிஸ்துராஜ் ஆய்வு செய்தார். பின்னர் கலெக்டர்தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, திருப்பூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர்உரிமைத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு விண்ணப்ப பதிவு முகாம்கள் 2 கட்டமாக நடைபெற்றது. விண்ணப்ப பதிவு முகாம்களில் பொதுமக்கள் வழங்கிய கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்தது குறித்து சரி பார்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. அந்த வகையில் பல்லடம் வட்டம் கள்ளக்கிணர் பகுதி, குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பூளவாடி ஊராட்சி வார்டு எண்1 பகுதியில் மற்றும் உடுமலை ஊராட்சி ஒன்றியம், கணக்கம்பாளையம் ஊராட்சி ரங்கநாதன்நகர், மைவாடி ஊராட்சி, ராஜாவூர் கள்ளியங்காடு ஆகிய பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விண்ணப்பம் பதிவு செய்தது குறித்து சரி பார்க்கும் பணிகள் ஆய்வு செய்யப்பட்டது என்றார்.

இந்த ஆய்வின் போது உடுமலை வருவாய் கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணன், பல்லடம் தாசில்தார் ஜெய்சிங் சிவக்குமார், உடுமலை தாசில்தார் சுந்தரம் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# குன்னத்தூர் பஸ் நிலையம் பகுதியில் ரவுண்டானா அமைக்க வேண்டும்: பேரூராட்சி கூட்டத்தில் தீர்மானம்



ஊத்துக்குளி,ஆக.31

நான்கு வழி சந்திப்பு பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ரவுண்டானா அமைக்க வேண்டும். அங்காளம்மன் கோவில் இடமானது குன்னத்தூர் பேரூராட்சிக்கு சொந்தமானதாகும். குன்னத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் சாதாரண கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூராட்சி தலைவர் கொமரசாமி தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ஜோதிமணி சோமசுந்தரம், செயல் அலுவலர் பால சுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான குன்னத்தூர் பஸ் நிலையம் அருகில் அமைந்துள்ள நான்கு வழி சந்திப்பு பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ரவுண்டானா அமைக்க வேண்டும். இதற்கு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அங்காளம்மன் கோவில் இடமானது குன்னத்தூர் பேரூராட்சிக்கு சொந்தமானதாகும். அந்த நிலத்தில் ஊத்துக்குளி சாலையையொட்டி மேற்புறம் 4 மீட்டர் அகலத்திலும், கோவிலில் வடபுறம் பெருமாநல்லூர் சாலையை ஒட்டி 4 மீட்டர் அகலத்தில் சாலை விரிவாக்கம் மற்றும் ரவுண்டானா அமைப்பதற்கு ஏதுவாக நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் வார்டு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# அவிநாசி அருகே ஸ்கேட்டிங் போட்டி

திருப்பூர்,ஆக.31

ஸ்கேட்டிங் போட்டிகள் அவிநாசி அருகேயுள்ள தனியார் பள்ளியில் நடைபெற்றன. காவல் ஆணையர் பிரவின்குமார் அபிநபு தொடங்கிவைத்தார். திருப்பூர் மாவட்ட ரோலர் ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன், தமிழ்நாடு ஸ்பீடு ஸ்கேட்டிங் அசோசியேஷன், திருப்பூர் ரோல்ஸ்ப்ரோ அகாதெமி சார்பில் ஸ்கேட்டிங் போட்டிகள் அவிநாசி அருகேயுள்ள தனியார் பள்ளியில் நடைபெற்றன.

200 மீட்டர், 400 மீட்டர், 1000 மீட்டர் பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளை திருப்பூர் மாநகர காவல் ஆணையர் பிரவின்குமார் அபிநபு தொடங்கி வைத்தார்.

இதில் 4 வயது முதல் 19 வயதுக்குள்பட்ட 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

போட்டிகளை மாவட்ட ரோலர் ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் மாவட்டச் செயலாளர் பிரகாஷ், தலைவர் தெய்வராஜ், துணைச்செயலாளர் ஜெயகுமார் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் இந்திரா சுந்தர்ராஜம் கூறுகையில், மாவட்ட அளவிலான ஸ்கேட்டிங் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் சென்னையில் விரைவில் நடைபெற உள்ள மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க உள்ளனர் என்றார்.

# அருள்புரத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க கோரிக்கை

பல்லடம்,ஆக.31

3 ஊராட்சிகளில் மட்டும் சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். பல்லடம் காவல் நிலையத்திற்கு 97 கிராமங்கள் மற்றும், பல்லடம் நகரம் ஆகியவை உள்ளடங்கியுள்ளது. பல்லடத்தை சேர்ந்த சமூக ஆர்வலர்கள் தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது: பல்லடம் உட்கோட்ட காவல்துறையில் பல்லடம், மங்கலம், காமநாயக்கன்பாளையம், அவினாசி பாளையம், மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையம் என 5 காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பல்லடம் காவல் நிலையத்திற்கு 97 கிராமங்கள் மற்றும், பல்லடம் நகரம் ஆகியவை உள்ளடங்கியுள்ளது. இந்தநிலையில் பல்லடம் நகரம், மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் வேகமான வளர்ச்சி அடைந்து மக்கள் தொகை அதிகரித்துள்ளது. இதில் ஆறுமுத்தாம் பாளையம், கரைப்புதூர், கணபதிபாளையம், ஆகிய 3 ஊராட்சிகளில் மட்டும் சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

மேலும் இங்கு பனியன் நிறுவனங்கள், சாய ஆலைகள் அமைந்துள்ளதால் வட மாநிலத் தொழிலாளர்கள், தென் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இங்குள்ள கிராமங்களில் ஏதாவது சம்பவங்கள் நடைபெற்றால் பல்லடம் காவல் நிலையத்தில் இருந்து அங்கு செல்வதற்கு தாமதமாகிறது.

இதனால் குற்றவாளிகள் எளிதாக தப்பி விடுகின்றனர். மேலும் பல்லடம் காவல் நிலையத்தில் தினமும் சுமார் 10க்கும் குறையாமல் வழக்குகள் பதிவு செய்யப்படுவதால் போலீசாருக்கு வேலை பளு அதிகரித்துள்ளது. பணிச்சுமையால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலையும் உள்ளது.

இதனால் பல்லடம் காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்து அருள்புரத்தை தலைமை இடமாகக் கொண்டு புதிய காவல்நிலையம்அமைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பால் பாக்கெட்களை திருடி விற்ற 2 பேர் கைது



பல்லடம்,ஆக.31

பால் பாக்கெட்களை அனுப்புவதற்காக சரக்கு வேன் வாடகைக்கு எடுத்து அனுப்பி வருகின்றனர். பால் பாக்கெட்களை ஆய்வு செய்த போது, பால் பாக்கெட்கள் அதிகம் இருப்பது தெரியவந்தது. பல்லடம் அருகே தனியாருக்கு சொந்தமான பால் தயாரிப்பு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இங்கு கோவை மணியக்காரன் பாளையத்தை சேர்ந்த கௌதம் (வயது34) சூப்பர்வைசராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில் பால் பாக்கெட்களை அனுப்புவதற்காக சரக்கு வேன் வாடகைக்கு எடுத்து அனுப்பி வருகின்றனர். இதன் ஓட்டுனராக பல்லடம் அருகே உள்ள காமநாயக்கன்பாளையத்தை சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவரது மகன் செந்தில்குமார் (வயது41) பணி புரிந்து வருகிறார். இந்த நிலையில் இருவரும் சேர்ந்து திட்டமிட்டு, பால் நிறுவனத்தில் இருந்து, குறிப்பிட்ட அளவுக்கு மேல் பால் பாக்கெட்டுகளை எடுத்துச் சென்று விற்பனை செய்து வந்தனர். இதற்கிடையே நேற்று சரக்கு வேனில் ஏற்றப்பட்ட பால் பாக்கெட்களை நிறுவன மேலாளர் சகாய பாபு ஆய்வு செய்த போது, குறிப்பிட்ட அளவைவிட பால் பாக்கெட்கள் அதிகம் இருப்பது தெரியவந்தது. இதனை அடுத்து அவர்களிடம் விசாரித்த போது இருவரும் பால் பாக்கெட்களை திருடி விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டனர். இதையடுத்து அவர்கள் இருவரையும் பல்லடம் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்து, பால் பாக்கெட்டுகள் திருட்டு குறித்து மேலாளர் சகாய பாபு புகார் அளித்தார். புகாரின் பேரில், வழக்கு பதிவு செய்த போலீசார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# அவிநாசி கோவிலில் கும்பாபிஷேக திருப்பணிகள் தீவிரம்

அவிநாசி,ஆக.31

அவிநாசி லிங்கேஸ்வரர் கோவிலில் கும்பாபிஷேக திருப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. கோபுரத்துக்கு வர்ணம் தீட்டும் பணிகள் வேகமாக நடைபெற்று வந்தது. அவிநாசி லிங்கேஸ்வரர் கோவிலில் கும்பாபிஷேக திருப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இக்கோவிலில் மார்ச் 13 ந்தேதி ஸ்ரீ கருணாம்பிகை அம்மன் ராஜகோபுரத்துக்கு, கோவை ராமானந்தா அடிகளார் அறக்கட்டளை சார்பில் திருப்பணி செய்வதற்கான பாலாலய பூஜைகள் நடந்தன.

அதன்பின் கோபுரத்துக்கு வர்ணம் தீட்டும் பணிகள் வேகமாக நடைபெற்று வந்தது. தற்போது வர்ணம் தீட்டும் பணிகள் மற்றும் சுதை சிற்பங்கள் மராமத்து பணிகள் முழுமை பெற்றுள்ளது. இதை தொடர்ந்து, ஏழுநிலை ராஜகோபுரத்துக்கு, வர்ணம் தீட்டும் பணிகளும், சுதை சிற்பங்களை மராமத்து செய்யும் பணிகளும் துவங்கியுள்ளன.

இதுதவிர கோவில் உள் பிரகாரத்தில் உள்ள பரிவார சன்னதிகளின் விமானங்களுக்கு மராமத்து பணிகள் முடிந்து வர்ணம் தீட்டும் பணிகள் துவங்கியுள்ளது.

விரைவில் கும்பாபிஷேகத்துக்கான தேதி அறிவிக்கப்படும் என கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# காரில் மதுபான பாட்டில்கள் கடத்தியவர் கைது

பல்லடம்,ஆக.31

மானாசிபாளையத்தில் காமநாயக்கன்பாளையம் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அவரை கைது செய்த போலீசார், அவரிடம் இருந்து 80 மதுபான பாட்டில்களை பறிமுதல் செய்தனர். பல்லடம் அருகே உள்ளகேத்தனூர்ஊராட்சி, மானாசிபாளையத்தில் காமநாயக்கன்பாளையம் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக வந்த கார் ஒன்றை நிறுத்தி சோதனையிட்டதில் மதுபான பாட்டில்கள் இருப்பதை கண்டனர். அந்த காரில் வந்த சூலூர் வதம்பச்சேரி, நல்லூர் பாளையத்தைச் சேர்ந்த காளிமுத்து என்பவரது மகன் ராஜேந்திரன் (வயது 37) என்பவரை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் அனுமதி இன்றி மதுபான பாட்டில்கள் கடத்தியதை ஒப்புக் கொண்டார். இதையடுத்து அவரை கைது செய்த போலீசார், அவரிடம் இருந்து 80 மதுபான பாட்டில்களை பறிமுதல் செய்தனர். மேலும் அவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகிறார்கள்.

# விலை வீழ்ச்சியை தடுக்க வலியுறுத்தி தேங்காய் உடைத்து போராட்டம்



குண்டடம்,ஆக.31

சிதறு தேங்காய் உடைக்கும் போராட்டம் நடந்தது. தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர். தேங்காய் விலை வீழ்ச்சியை தடுக்க வலியுறுத்தி குண்டடத்தை அடுத்த குங்குமம் பாளையத்தில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம், ஏர்முனை இளைஞர் அணி சார்பில் சிதறு தேங்காய் உடைக்கும் போராட்டம் நடந்தது. போராட்டத்திற்கு ஏர்முனை இளைஞர் அணி அமைப்பின் திருப்பூர் மாவட்ட செயலாளர் தீரன் பிரகாஷ் தலைமை தாங்கினார். இளைஞர்அணிமாவட்ட தலைவர்ஜோதிபிரகாஷ், நந்தவனம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் தனசெல்வி நாச்சிமுத்து, வட்டார தலைவர் மயில்சாமி, பொருளாளர் முருகேஷ் உள்பட தென்னை விவசாயிகள் கலந்து கொண்டனர். போராட்டத்தில் தேங்காயின் அடிப்படை ஆதார விலையை உயர்த்த வேண்டும். ரேஷன்கடையில் தேங்காய் எண்ணெயை வழங்க வேண்டும். கள் இறக்க அனுமதி வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து சிதறு தேங்காய்களை உடைத்தனர். இந்த போராட்டத்தில் பல் வேறு கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# பவானிசாகர் அணையில் இருந்து கடைமடை பகுதிக்கு வந்து சேர்ந்த தண்ணீர்: பொங்கல் வைத்து விவசாயிகள் வழிபாடு

காங்கயம்,ஆக.31

சம்பா நெல் சாகுபடி கால்வாய் வழியாக கடந்த 19ந் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டது. மங்களப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சூர் கிராம ஊராட்சி பகுதியை சென்றடைய 9 நாட்கள் ஆகும். பவானிசாகர் அணையில் இருந்து நஞ்சை சம்பா நெல் சாகுபடி கால்வாய் வழியாக கடந்த 19ந் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டால் கடைமடை பகுதியான மங்களப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சூர்கிராம ஊராட்சி பகுதியை சென்றடைய 9 நாட்கள் ஆகும். ஆனால் இந்த ஆண்டு பாசன பிரதான கால்வாய் பொக்லைன் எந்திரம் மூலம் தூர்வாரப்பட்டதால் தண்ணீர் வந்து சேர்ந்தது.

இதனை தொடர்ந்து கீழ் பவானி பாசன பாதுகாப்பு இயக்க நிர்வாகிகள், கடைமடை விவசாயிகள் மங்களப்பட்டி கிராமத்திற்கு வந்து சர்க்கரை பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு செய்தனர். பின்னர் தண்ணீரில் மலர் தூவி வணங்கினர்.

இதுபற்றி கீழ்பவானி பாசன பாதுகாப்பு இயக்க நிர்வாகிகள் கூறியதாவது: பவானிசாகர் அணை கட்டப்பட்ட கடந்த 66 ஆண்டுகளில் கீழ் பவானி பாசன கால்வாய் தூர்வாரப்படாமல் ஆண்டுதோறும் தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. ஆனால் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு உத்தரவின்படி திருப்பூர், ஈரோடு மாவட்ட பொதுப்பணித்துறை அதிகாரிகள் குழுவினர் ஒருங்கிணைந்து கீழ்பவானி பாசன கால்வாயை தூர் வாரி இருந்தனர். கீழ்பவானி பாசன கால்வாயில் தற்போது தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில் காலநிலை கோடை வெயில் காரணமாக குறைந்து இருந்த கிணறுகள், ஆழ் குழாய் கிணறுகளின் நீர்மட்டம் விரைவில் கிடுகிடுவென உயர்ந்து பொதுமக்களின் குடிநீர் ஆதாரம் பாதுகாக்கப்படும்.

எனவே பவானிசாகர் அணையில் இருந்து நஞ்சை சம்பா நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட்ட தமிழ்நாடு அரசுக்கு கீழ்பவானி பாசன பாதுகாப்பு இயக்கம் மற்றும் விவசாயிகள் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பெண் குழந்தைகள் நலன் பாதுகாக்க சட்ட விழிப்புணர்வு முகாம்

திருப்பூர்,ஆக.31

கருப்பகவுண்டன்பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் சட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது மூன்றாம் பாலினத்தவர் குறித்த சட்டம் குறித்து விளக்கி கூறப்பட்டது. திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் திருப்பூர் கருப்பகவுண்டன்பாளையத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் சட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது. குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் மூன்றாம் பாலினத்தவர் குறித்த சட்டம் குறித்து விளக்கி கூறப்பட்டது. கோர்ட்டு வக்கீல்கள் அருணாசலம், திங்களவள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி ரியாஷ்கான் ஆகியோர், பெண் குழந்தைகள் நலனுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள் குறித்தும், மூன்றாம் பாலினத்தவரை சமுதாயத்தில் வேறுபாடின்றி நடத்த வேண்டும் என்பது குறித்தும், பாதுகாப்புக்காகவும், நலனுக்காகவும் உருவாக்கப்பட்டுள்ள சட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துக்கூறினார்கள். முடிவில் பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் நந்தகோபால் நன்றி கூறினார். இதில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## பள்ளிகளில் மின்இணைப்பு முழுமையாக சோதனை செய்ய உத்தரவு

திருப்பூர்,ஆக.31

திருப்பூர், செரங்காடு மாநகராட்சி நடுநிலைப் பள்ளி கழிப்பறையில் மின் வயல் உரசி, மாணவி ஒருவருக்கு கழுத்து, கையில் எலும்பு முறிவு மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்டது. இதையடுத்து பள்ளிகளில் மின் இணைப்புகளை சோதனை செய்ய மேயர் தினேஷ்குமார் உத்தரவிட்டுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மின் இணைப்புகள், வயர்கள் அனைத்தும் முழுமையாக ஆய்வு செய்து, பராமரிப்பு மேற்கொள்ள, மாநகராட்சி பொறியியல் பிரிவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.பகுதி வாரியாக அனைத்து பள்ளிகளிலும் மின் இணைப்பு முழுமையாக சோதனை செய்து, வெளிப்பகுதியில் எங்கும் மின்சார வயர்கள் இல்லாத வகையில், பி.வி.சி., குழாய் பொருத்தப்படும். முழுமையாக அவற்றை சரி செய்து அறிக்கை அளிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கல்லூரிகளில் முதுகலை மாணவர் சேர்க்கை 1ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம்

திருப்பூர்,ஆக.31

கல்லூரிகளில் காலியாக உள்ள முதுகலை பட்டப் படிப்புக்கு மாணவர் சேர்க்கை நடந்தது 26ந் தேதி வரைகால அவகாசம் வழங்கப்பட்டது. கடந்த 14ந்தேதி முதல் 22ந்தேதி வரை அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள முதுகலை பட்டப் படிப்புக்கு மாணவர் சேர்க்கை நடந்தது. முதல் கட்டமாக கடந்த 26ந் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. முதுகலை படிப்பில் இணையும் மாணவர் வசதிக்காக, விண்ணப்ப பதிவுக்கான அவகாசம் வருகிற 1ந்தேதி வரை இரண்டாவது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது. மாணவ, மாணவிகள் விபரங்களை WWW.TNGASA.IN என்ற இணையதளம் மற்றும் 93634 62070 என்ற மொபைல்போன் எண் வாயிலாக அறியலாம் என கல்லூரி கல்வி இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

# கோவை மாவட்ட கிராமப்புறங்களில் நிறுத்தப்பட்ட மினி பஸ்களை மீண்டும் இயக்க வேண்டும்: விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

**கோவை,ஆக.31**

தமிழ்நாட்டில் நீண்ட காலமாக ஓட்டி வந்த மினி பஸ் சேவை அன்றைய முதல்அமைச்சர் கருணாநிதியால் தொடங்கப்பட்டது. தற்போது 800க்கும் குறைவான பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுவதாக தெரிகிறது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் சு.பழனிச்சாமி கோவையில் இன்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது: தமிழ்நாட்டில் நீண்ட காலமாக ஓட்டி வந்த மினி பஸ் சேவை அன்றைய முதல்அமைச்சர் கருணாநிதியால் தொடங்கப்பட்டது. இந்த பஸ்கள் தமிழகத்தின் அனைத்து கிராமப்புறங்களிலும் சென்று விவசாயிகள், கிராமப்புற ஏழை மக்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மிகவும் உதவியாக இருந்தது. 6000 பேருந்துகள் இயக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது 800க்கும் குறைவான பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுவதாக தெரிகிறது. கோவை மாவட்டத்தில் 150 க்கும் மேற்பட்ட மினி பஸ்கள் இருந்த நிலையில் 20க்கும் குறைவான பஸ்கள் மட்டுமே தற்போது இயக்கப்படுகிறது. கிராமப்புற ங்களில் பல்வேறு பகுதிகளில் ஓடாமல் மினி பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டு புதர் மண்டி கிடப்பதை கண்கூடாக பார்க்கிறோம். டீசல் விலை உயர்வு, ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் கிடைப்பது சிரமமாக இருப்பதால் பஸ்களை இயக்குவது இல்லை என்று மினி பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கிறார்கள். தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தேர்தலில் வெற்றி பெற்று வந்தால் இந்த பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம் என்று கூறினார்கள். இது நாள் வரையிலும் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் பல்வேறு தரப்பினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கிராமப்புறத்தில் உள்ள விவசாய பெருமக்களுக்கு மிகவும் உதவியாக இருந்த இந்த பஸ்களை மீண்டும் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கோவையில் சூலூர், மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இந்த மினி பஸ்களை இயக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# சூளேஸ்வரன்பட்டியில் தொழிலாளி தற்கொலை

**பொள்ளாச்சி,ஆக.31**

கணவன், மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக தெரிகிறது. பொள்ளாச்சி கிழக்கு போலீசார் ரமேஷ்குமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி விசாரித்து வருகின்றனர். தென்காசியை சேர்ந்தவர் ரமேஷ்குமார் (வயது30). இவரும் சென்னையை சேர்ந்த குமாரி (26) என்பவரும் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்கு பிறகு ரமேஷ்குமார் தனது மனைவியுடன் பொள்ளாச்சி சூளேஸ்வரன்பட்டியில் தங்கி இருந்தார்.

ரமேஷ்குமார் கட்டிட வேலைக்கும், குமாரி அங்குள்ள ஒரு வீட்டில் வீட்டு வேலையும் செய்து வருகிறார்.

இந்த நிலையில் ரமேஷ் குடிப்பழக்கத்திற்கு அடிமையானதாக தெரிகிறது. இதனால் கணவன், மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக தெரிகிறது.

சம்பவத்தன்று இரவு ரேவதி வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தார். வீட்டின் கதவு உள்பக்கமாக பூட்டப்பட்டிருந்தது. கதவை தட்டியும் திறக்காததால் சந்தேகம் அடைந்த அவர் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தார். அப்போது வீட்டிற்குள் ரமேஷ்குமார் தூக்கில் பிணமாக தொங்கி கொண்டிருந்தார். அவரது உடலை பார்த்து குமாரி கதறி அழுதார்.

இதுகுறித்து தகவல் அறிந்த பொள்ளாச்சி கிழக்கு போலீசார் விரைந்து சென்று இறந்த ரமேஷ்குமாரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி விசாரித்து வருகின்றனர்.

# மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்ட பொதுமக்கள்

**ஈரோடு,ஆக.31**

மக்கள்சிப்காட்டில் உள்ள மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டனர். குளத்தின் நீர் தரத்தை பரிசோதிக்க வலியுறுத்தினார்கள். ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட்டில் ஆடைகள் தயாரிப்பு மில் ஒன்றின் கட்டிட வேலை நடந்து வருகிறது.

அங்கிருந்து கழிவு நீர் வெளியேறி ஓடைகாட்டூர் குளத்துக்கு சென்றது. பின்னர் அங்கிருந்து பாலத்தொழுவு கிராமம் குளத்துக்கு பாய்ந்தது. பாலத்தொழுவு குளத்தில் அத்திக்கடவு அவிநாசி திட்டத்தில் நீர் நிரப்பப்பட உள்ளது.

இந்நிலையில் குளத்தில் கலந்த கழிவுநீர் மாதிரியை பாட்டிலில் எடுத்துக் கொண்டு அப்பகுதி மக்கள் சிப்காட்டில் உள்ள மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டனர். தாங்கள் கொண்டு சென்ற குளத்தின் நீர் தரத்தை பரிசோதிக்க வலியுறுத்தினார்கள்.

இதையடுத்து அங்கிருந்த மாசு கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் பழனிச்சாமி மாவட்ட பொறியாளர் பணி நிமித்தமாக சத்தியமங்கலம் சென்றுள்ளார். அவர் வந்தவுடன் தரத்தை சோதித்து தருவதாக கூறினார்.

மேலும் வாரியத்தின் மூலமும் மக்கள் எடுத்த இடத்தில் மாதிரி நீரை சேகரித்து சோதனை செய்வ தாக கூறியுள்ளார்.

அதை ஏற்காத மக்கள் உடனடியாக தண்ணீரின் தரத்தை சோதிக்குமாறு கூறி காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் மாலை பொறியாளர் ஆறுமுகம் அலுவலகத்திற்கு வந்தார்.

சிப்காட்டில் தனியார் மில் கட்டிட வேலை நடக்கும் இடத்தில் ஆய்வுக்கு தண்ணீர் எடுத்து ஆய்வு செய்து ஒரு வாரத்தில் அறிக்கை தருவதாக கூறினார்.

மேலும் மக்கள் கொடுத்த மனுவுக்கு ஒப்புகை சீட்டு வழங்கினார். இதை தொடர்ந்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# சமையல் கியாஸ் விலை அதிரடி குறைப்பால் இல்லத்தரசிகள் மகிழ்ச்சி

**சேலம்,ஆக.31**



பெண்கள் வீடுகளில் பயன்படுத்தும் சமையல் கியாஸ் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து கொண்டே சென்றது. ஒவ்வொரு ஆண்டும் சமையல் கியாஸ் சிலிண்டரின் விலை அதிகரித்துக் கொண்டே சென்று கடந்த மார்ச் மாதம் 1118 ரூபாய் 50 காசாக உயர்ந்தது. 2022ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ரூ.915 ஆக இருந்த சிலிண்டர் விலை இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 53 ரூபாய் 50 காசு உயர்த்தப்பட்டது. இதன் மூலம் சமையல் கியாஸ் சிலிண்டரின் விலை முதல் முறையாக ரூ. ஆயிரத்தை தாண்டியது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் சமையல் கியாஸ் சிலிண்டரின் விலை ரூ.1068.50 ஆக இருந்தது. இதையடுத்து கடந்த மார்ச் மாதம் சிலிண்டரின் விலை ரூ.50 அதிகரித்தது. இதன் மூலம் சமையல் கியாஸ் சிலிண்டரின் விலை உயர்ந்து ரூ.1118.50 ஆனது. கடந்த 6 மாதங்களாக சமையல் கியாஸ் இதே விலைக்கே விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இப்படி சமையல் கியாஸ் சிலிண்டரின் விலை ஏறிக் கொண்டே சென்றதால் குடும்ப தலைவிகள் கடும் சிரமத்தை சந்தித்தனர். இந்த சிலிண்டர் விலை உயர்வு நடுத்தர மற்றும் ஏழை மக்களை கடுமையாக பாதித்தது. தங்களது மாத வருவாயில்குறிப்பிட்டதொகையை கியாஸ் சிலிண்டருக்கே ஒதுக்க வேண்டியுள்ளது என்று கூறி அவர்கள் வேதனைப்பட்டு வந்தனர். இப்படி சிலிண்டர் விலை தாறுமாறாக ஏறி இருந்ததால் கிராமப்புறங்களில் பலர் விறகு அடுப்புகளுக்கும் மாறினார்கள். பொதுமக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு சமையல் கியாஸ் சிலிண்டர் விலையை வெகுவாக குறைக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்து வந்தன. சிலிண்டர் விலை குறையுமா? என இல்லத்தரசிகளும் எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்த நிலையில் சமையல் கியாஸ் சிலிண்டர் விலை ரூ.200 குறைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சேலத்தில் ரூ.1190 ஆக இருந்த கியாஸ் சிலிண்டரின் விலை ரூ.990 ஆக குறைந்திருக்கிறது. கடந்த 1½ ஆண்டுகளுக்கு பிறகு சிலிண்டர்விலை 1000க்கும் கீழ் குறைந்திருக்கிறது. இந்த விலை குறைப்பு இன்றுமுதல்(புதன்கிழமை) அமலுக்கு வந்துள்ளது. இது இல்லத்தரசிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இருப்பினும் பெண்கள் பலர் சிலிண்டர் விலையை மேலும் குறைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக பெண்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் வருமாறு: சேலம் புதுரோடு பகுதியை சேர்ந்த குடும்ப தலைவி கவுசல்யா (25): மின்சாரம், காய்கறிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்ந்திருக்கும் நிலையில் கியாஸ் சிலிண்டர் விலை குறைக்கப்பட்டு உள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதனை வரவேற்கிறோம். சேலத்தை சேர்ந்த வங்கி ஊழியர் கலைமதி (30): அரசு இலவசமாக எந்த பொருளையும் தர வேண்டாம். விலைவாசி உயர்வைகட்டுக்குள்வைக்க வேண்டும். அந்த வகையில் கியாஸ் விலையில் ரூ.200 குறைத் துள்ளது வரவேற்க தக்கது. இதேபோல் காய்கறி உள்ளிட்டவற்றின் விலையையும் கட்டுப்படுத்த வேண்டும். அம்மாபேட்டையை சேர்ந்த பெரியநாயகி (40): ஏழை மக்கள் விலைவாசி உயர்வால் கடுமையாக பாதிக்கப் பட்டு உள்ளனர். குழந்தைகளை படிக்க வைக்கவே சிரமப்பட்டு வருகிறோம். கியாஸ் சிலிண்டர் விலை உயர்வு என்பது ஒவ்வொரு மாதமும் பெரும் சுமையாகவே இருந்தது. தற்போது இந்த விலை குறைப்பு வரவேற்கத்தக்கது தான். மேலும் ரூ.200 குறைத்தால் நன்றாக இருக்கும். மத்திய அரசு எந்த இலவசமும் கொடுக்காமல் பொதுமக்கள் வாழ்க்கை தரம் உயர நல்ல திட்டங்களை கொண்டு வந்து நாட்டு மக்கள் வளர்ச்சிக்கு வழிவகை செய்ய வேண்டும்.

# மொரப்பூரில் வாக்கு சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம்

**மொரப்பூர்,ஆக.31**




18 வயது நிரம்பி உள்ளவர்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும். இறந்தவர்கள்பெயரை நீக்க வேண்டும் தருமபுரி மாவட்டம், மொரப்பூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க வாக்கு சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம் மொரப்பூரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மொரப்பூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க செயலாளர் செங்கண்ணன் தலைமை வகித்தார். மாவட்ட அவைத்தலைவர் மனோகரன், மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ண குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் சென்னகிருஷ்ணன், மொரப்பூர் கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் மகாலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளை ஞரணி அமைப்பாளர் லோகேஷ் வரவேற்று பேசினார். இக்கூட்டத்தில் தி.மு.க மேற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பழனியப்பன் கலந்து கொண்டு வாக்கு சாவடி முகவர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து பேசினார். இதில் 18 வயது நிரம்பி உள்ளவர்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும், இறந்தவர்கள் பெயரை நீக்க வேண்டும் என கூறினார். கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய செயலாளர் ராசு தமிழ்செல்வன், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர்கள் சசிகுமார், செந்தமிழன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கவிதா, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிவாஜி, மாவட்ட விவசாய அணி மாவட்ட துணை தலைவர் சாமிநாதன், தொப்பம்பட்டி ஊராட்சி மன்ற துணை தலைவர் செல்வி சின்னபையன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை, ராஜராஜன், முன்னாள் சேர்மன் தென்னரசு, ஓய்வு பெற்ற ஆசிரியர் ராமகிருஷ்ணன் மற்றும் வாக்கு சாவடி முகவர்கள் உள்ளிட்ட பலர் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் நிர்வாகி முல்லை கோபால் நன்றி கூறினார்.

# கொடநாடு வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படையுங்கள்: எடப்பாடி பழனிசாமி ஆவேசம்

**மதுரை,ஆக.31**



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று சாமி தரிசனம் செய்தார். பின்னர்அவர்நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: மதுரையில் நடைபெற்ற அ.தி.மு.க. பொன்விழா எழுச்சி மாநாடு மூலை முடுக்கு முதல் கிராமம், பட்டிதொட்டி வரை சென்றடைந்தது. இதற்காக அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று காலை மதுரை மீனாட்சி அம்மன் மற்றும் அருள்மிகு சுந்தரேஸ்வரர் சாமியை தரிசனம் செய்தேன். கேள்வி: கொடநாடு என்றாலே எடப்பாடி பழனிசாமிக்கு குலை நடுக்கம் ஏற்படுகிறது என்று தி.மு.க. அதிகாரப்பூர்வ முரசொலி பத்திரிகையில் செய்தி வெளியிட்டுள்ளார்களே? உண்மையை சொல்லத் தயார் என்று அவர் ஏன் சி.பி.சி.ஐ.டி.க்கு வரவில்லை? வந்திருந்தால் நம்பலாம்? என்று அதில் கூறி இருக்கிறார்களே? பதில்: நான் சட்டசபையிலே இதுபற்றி கேட்டேனே? அப்போதே முதலமைச்சர் சொல்லியிருக்கலாம். பல கேள்விகள் எழுப்பினேன். அப்போது ஏன் வாய்மூடி இருந்தார்கள். இவர்கள் வெளியில் வீர வசனம் பேசுகிறார்கள். ஒரு முதலமைச்சர் இருக்கிறபோது பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. தி.மு.க. ஆட்சியில் இருந்த போது எத்தனை பேர் இறந்தார்கள். அதையெல்லாம் நாங்கள் சொல்ல மாட்டோமா? திருப்பி கொண்டு வரமாட்டோமா? அ.தி.மு.க. ஆட்சியின்போது ஒரு சம்பவம் நடைபெறுகிறது. நாட்டில் எத்தனையோ சம்பவங்கள் நடைபெறுகிறது. இதை மட்டும் ஏன் மையமாக வைத்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். வேண்டும் என்றே திட்டமிட்டு அவதூறு செய்தியை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே அவதூறு செய்தி பரப்பிய ஒருவர் மீது நான் வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தில்வழக்குநிலுவையில் உள்ளது. நான் இதுபற்றி அடிக்கடி தெளிவுபடுத்தி உள்ளேன். இதுபற்றி சட்டமன்றத்திலும் பேசி உள்ளேன். ஏன் அவர்கள் அதைப்பற்றி மட்டும் குறிப்பிடவில்லை? அந்த சம்பவம் நடந்து முடிந்தவுடன், குற்றவாளிகளை கண்டுபிடித்து அ.தி.மு.க. அரசு. குற்றவாளிகளை சிறையில் அடைத்தது அ.தி.மு.க. அரசு. வழக்கு அ.தி.மு.க. ஆட்சியின்போது நடைபெற்றது. அப்போது அந்த குற்றவாளிகளுக்கு வாதாடுவதற்கு, ஆஜரானதுதி.மு.க. வழக்கறிஞர். ஒரு நாடாளுமன்ற உறுப்பினரே குற்றவாளிக்கு ஆதரவாக வாதாடி இருக்கிறார். இதை ஏன் சொல்லமாட்டேன் என்கிறார்கள். நீங்களும் வெளியிடுவது கிடையாது. தெளிவுப்படுத்தியது கிடையாது. இதில் குற்றவாளிகளுக்கு ஜாமீன்தாரராக இருந்தது தி.மு.க. கட்சியை சேர்ந்தவர்கள். இதில்தான் சந்தேகம் ஏற்படுகிறது. நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். இந்த அரசுக்கு சொல்கிறேன். இதை ஏன் சி.பி.ஐ. விசாரிக்க கூடாது. சி.பி.ஐ.க்கு உத்தரவிடுங்கள். சி.பி.ஐ. விசாரிக்கட்டும். நீங்கள் தான் சந்தேகம் இருக்கிறது என்கிறீர்கள். சி.பி.ஐ.யிடம் வழக்கை ஒப்படையுங்கள். இந்த ஜாமீன்தாரருக்கும், கொலை குற்றவாளிக்கும் என்ன சம்பந்தம்? இந்த கொலை குற்றவாளிகள் எல்லோரும் கேரள மாநிலத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் கொலை, கொள்ளை, வழிப்பறி, ஆள் கடத்தல், போதை பொருள் கடத்தல் என இப்படி கொடும் குற்றம் புரிந்துள்ளனர். இவர்கள் மீதான வழக்கு கேரளாவில் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. அப்படி நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற கொடும் குற்றவாளிகளுக்கு தி.மு.க. வழக்கறிஞர் ஆஜராகி வாதாடி வருவதற்கு என்ன காரணம்? தி.மு.க. கட்சியை சேர்ந்தவர்கள் இவர்களுக்கு ஜாமீன்தாரராக இருப்பதற்கு என்ன பின்னணி, என்ன தொடர்பு இருக்கிறது? அதுதான் எங்களது கேள்வி. வழக்கு நடந்த சூழலில் இடையில் 15 மாத காலம் கொரோனா காலத்தில் நீதிமன்றம் நடைபெறவில்லை. அதுதான் காலதாமதம். பிறகு இவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள் இதை விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்லி ஐ.ஜி. தலைமையில் விசாரணையை மேற்கொண்டனர். அந்த ஐ.ஜி., அவருக்கு கீழ் டி.ஐ.ஜி., எஸ்.பி., ஏ.எஸ்.பி., டி.எஸ்.பி., இத்தனை பேர் இருந்து விசாரித்து நீதிமன்றத்தில் சுமார் 790 பக்கம் அறிக்கை தாக்கல் செய்ததாகவும் 90 சதவீதம் வழக்கு முடிந்ததாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்ததாக தகவல். அப்படியிருக்கும்போது ஏன் மறுபடியும் சி.பி.சி.ஐ.டி.க்கு போகிறீர்கள். உங்கள் அரசாங்கம் தானே நியமித்தது? அதில் என்ன சந்தேகம்? ஒரு ஐ.ஜி. தலைமையில் இவ்வளவு விசாரணை மேற்கொண்ட பிறகு 10 சதவீதம் விசாரணையை முடிக்க எவ்வளவு காலம் ஆகும்? ஆனாலும் எங்கள் மீது எந்த குற்றமும் சுமத்த முடியவில்லை. அதனால் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இதை அடிக்கடி இவர்கள் வெளியிட்டு வருகிறார்கள். இதை அடிக்கடி நீங்களும் கேட்க நானும் பலமுறை பதில் சொல்லிவிட்டேன். இது பற்றி சட்டமன்றத்திலும் நேருக்கு நேர் முதலமைச்சரிடம் கேட்டு விட்டேன். வழக்கை சி.பி.சி.ஐ.டி.யிடம் ஒப்படைக்க வேண்டியதுதானே? உங்கள் அரசாங்கத்தின் விசாரணை மீது உங்களுக்கே நம்பிக்கை இல்லையா? இப்போது இவர் முதலமைச்சராக இருக்கிறார். ஒரு கொலை நடந்தால் முதலமைச்சர் மீது குற்றம் சாட்டினால் அவர் ஏற்றுக்கொள்வாரா? கேள்வி: ஏன் பதறுகிறீர்கள் என்று கேட்கிறார்களே? பதில்: நான் பதறவில்லை. நான் பலமுறை அறிக்கை வாயிலாக சொல்லிவிட்டேன். பேட்டியின் போதும் விளக்கமாக கூறியுள்ளேன். நீங்கள் ஏன் அந்த ஜாமீன்தாரரை விசாரிக்க மறுக்கிறீர்கள்? அதில் தானே உண்மை வெளிவரும். குற்றம் புரிந்தவர்கள் கேரள மாநிலத்தை சேர்ந்தவர்கள். கொடும் குற்றம் புரிந்த இவர்களுக்கு தி.மு.க. கட்சியை சேர்ந்தவர் எதற்கு ஜாமீன்தாரராக இருக்கிறார்? அதுதான் மக்களுக்கு மிகப்பெரிய சந்தேகம் ஏற்படுகிறது. கேள்வி: உண்மைவெளிவந்துவிடும் என சி.பி.ஐ. விசாரணைக்கு தி.மு.க. தயங்குகிறார்களா? பதில்: அப்படித்தான் தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# மதுரை பெரியார் பஸ் நிலையத்தில் பயணிகளிடம் செல்போன் பறித்த வடமாநில வாலிபருக்கு தர்ம அடி

**மதுரை,ஆக.31**



பிடிபட்ட திருடனுக்கு பொதுமக்கள் தர்ம அடி கொடுத்து செல்போன்களை மீட்டனர். போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே உள்ள தாராபட்டியை சேர்ந்தவர் ரவி. விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அருகே உள்ள ஆவியூரை சேர்ந்தவர் கருப்பையா. இவர்கள் நாள்தோறும் மதுரைக்கு வேலைக்காக வந்து செல்கின்றனர். அதன்படி இன்று காலை பெரியார் பஸ் நிலையம் வந்த 2 பேர் பஸ்சுக்காக காத்திருந்தனர். பஸ் வரும் வரை 2 பேரும் செல்போனை எடுத்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அவர்களை வடமாநில வாலிபர்கள் நோட்டமிட்டதாக தெரிகிறது.

அதில் ஒருவர் கண்ணிமைக்கும் நேரத்தில் ரவி, கருப்பையா கையில் இருந்த செல்போனை பறித்துக்கொண்டு அங்கிருந்து ஓடினார். இதனால் அதிர்ச்சியடைந்த 2 பேரும் திருடன்...திருடன்... என கூச்சலிட்டனர். உடனே அங்கிருந்த பொதுமக்கள், மாணவர்கள் திருடனை விரட்டிச் சென்றனர். எல்லீஸ் நகர் பாலம் கீழ்ப்பகுதியில் பிடிபட்ட திருடனுக்கு பொதுமக்கள் தர்ம அடி கொடுத்து செல்போன்களை மீட்டனர். இதனைத்தொடர்ந்து அந்த வாலிபர் திடீர்நகர் போலீசில் ஒப்படைக்கப்பட்டார்.

போலீசார் அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். செல்போன் பறிக்க அவருடன் மேலும் 4 பேர் வந்ததாக தெரிகிறது. அவர்கள் யார்? என்பது தொடர்பாகவும், வேறு இடங்களில் கைவரிசைகாட்டியுள்ளார்களா? என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மக்கள் நடமாட்டம் மிகுந்த பெரியார் பஸ் நிலையத்தில் நடந்த செல்போன் பறிப்பு சம்பவம் பொதுமக்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# குழந்தைகளுக்கு சுவையான உணவு தயாரித்துவழங்கிய சமையலருக்கு பாராட்டு

**சேலம்,ஆக.31**



முண்டகம்பாடி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகளில் கலெக்டர் கார்மேகம் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். குறித்த நேரத்தில் சமைத்து வழங்கிய சமையலர் சோனியாவிற்கு பாராட்டி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. ஏற்காட்டில் முதல்அமைச்சரின் காலை உணவுத் திட்ட செயல்பாடுகள் குறித்து முண்டகம்பாடி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகளில் கலெக்டர் கார்மேகம் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். இப்பள்ளியில் குழந்தைகளுக்கு காலை உணவினை தரமாகவும், சுவையாகவும், குறித்த நேரத்தில் சமைத்து வழங்கிய சமையலர் சோனியாவிற்கு பாராட்டி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. மேலும், காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து பள்ளிகளிலும் நாள்தோறும் தொடர் ஆய்வுகள் மேற்கொண்டு, திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நிலை தடுமாறி கீழே விழுந்த முதியவர் சாவு

**கோபி,ஆக.31**

கயிறு கருப்பண கவுண்டரின் காலில் சுற்றி எதிர்பாராத விதமாக கீழே விழுந்தார். இதில் பலத்த காயம் ஏற்பட்டு மயங்கி நிலையில் கிடந்துள்ளார். ஈரோடு மாவட்டம் ஆலுகுழி காசியூர் நரியன் தோட்டத்தைச் சேர்ந்தவர் கருப்பணகவுண்டர் (வயது 76). இவருக்கு சுப்பாயாள் என்ற மனைவியும், ஒரு மகனும் உள்ளனர். இவர் விவசாய வேலை செய்து வருகிறார். மேலும் சொந்தமாக 2 மாடுகளை வளர்த்து வருகிறார்.

இந்நிலையில் சம்பவத்தன்று கருப்பணகவுண்டர் மாடுகளை மேய்த்து விட்டு பின்னர் மாட்டு தொழுவத்திற்கு வரும்போது மாட்டின் கயிறு கருப்பண கவுண்டரின் காலில் சுற்றி எதிர்பாராத விதமாக கீழே விழுந்தார்.


இதில் பலத்த காயம் ஏற்பட்டு மயங்கி நிலையில் கிடந்துள்ளார்.

இதை பார்த்த அக்கம் பக்கத்தினர் அவரை கோபியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். பின்னர் அங்கு முதலுதவி பெற்று மேல்சிகிச்சைக்காக ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இந்நிலையில் அங்கு சிகிச்சை பெற்று வந்த கருப்பணகவுண்டர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். பின்னர் இதுகுறித்து அவரது மகன் மாரிமுத்து (43) கடத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இணையத்தில் லீக் ஆன ஜெயிலர் "HD ப்ரிண்ட்" அதிர்ச்சியில் படக்குழு!

. ரஜினிகாந்த நடிப்பில் நெல்சன் இயக்கிய திரைப்படம் ஜெயிலர். ஆகஸ்ட் 10ம் தேதி வெளியான ஜெயிலர் திரைப்படம் விமர்சன ரீதியிலும், வர்த்தக ரீதியிலும் அமோக வரவேற்பை பெற்றது. இதுவரை இந்த படம் ரூ. 525 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்து இருப்பதாக படத்தை தயாரித்த சன் பிக்சர்ஸ் நிறுவனம் தெரிவித்து இருக்கிறது.




படம் தியேட்டர்களில் நல்ல வரவேற்பை பெற்று வருவதால், ஜெயிலர் திரைப்படம் இதுவரை ஒ.டி.டி. தளத்தில் ரிலீஸ் ஆகவில்லை. ஜெயிலர் திரைப்படம் நெட்ஃப்ளிக்ஸ் மற்றும் சன் நெக்ஸ்ட் தளங்களில் பின்னர் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், ஜெயிலர் படத்தின் ஹெச்.டி. ப்ரின்ட் (அதிக தரமுள்ள) இணையத்தில் கசிந்துள்ளது. ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வரும் ஜெயிலர் படம், ரிலீசான சிறிது நாட்களிலேயே ஹெச்.டி. வடிவில் இணையத்தில் லீக் ஆகி இருப்பது படக்குழு மற்றும் தயாரிப்பு நிறுவனத்திற்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. ஜெயிலர் படத்தில் ரஜினிகாந்த், மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

## புதிய ஆக்ஷன் திரைப்படமாக உருவாகியுள்ள 'அலங்கு'

எஸ்.பி.சக்திவேல் இயக்கத்தில் உருவாகி உள்ள திரைப்படம் 'அலங்கு'. இந்த படத்தில் குணாநிதி கதாநாயகனாக நடித்துள்ளார். உறுமீன் , பயணிகள் கவனிக்கவும் படத்தை இயக்கிய இயக்குனர் எஸ்.பி. சக்திவேல் இயக்கத்தில் உருவாகி உள்ள திரைப்படம் 'அலங்கு'. இந்த படத்தில் குணாநிதி கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், செம்பன் வினோத், காளிவெங்கட், சரத் அப்பானி, சவுந்தரராஜா, ஸ்ரீரேகா, கொற்றவை, ரெஜின் ரோஸ், சண்முகம் முத்துசாமி, மாஸ்டர் அஜய், இதயகுமார் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். டி.சபரிஷ் , எஸ்.ஏ. சங்கமித்ரா இருவரும் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அஜீஷ் இசையமைக்க எஸ். பாண்டிகுமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படம் தமிழக – கேரள எல்லை பகுதியை ஒட்டிய வனப்பகுதியில் நடந்த உண்மை சம்பவங்களின் அடிப்படையில் முற்றிலும் ஆக்ஷன் டிராமாவாக உருவாகியுள்ளது. 'அலங்கு' படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பு கேரள மாநிலம் இடுக்கி,



அட்டப்பாடி அதை தொடர்ந்து தேனி, கம்பம் , கோவை மாவட்டம் ஆனைகட்டி ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக 52 நாட்கள் படக்குழு நடத்தி முடித்துள்ளனர். முற்றிலும் மாறுபட்ட ஒரு திரை அனுபவத்தை இத்திரைப்படம் தரும் எனவும் படத்தில் அதிக அளவில் வன விலங்குகள் நடித்துள்ள காட்சிகள் இருப்பதால் படத்தின் கிராபிக்ஸ் பணிகள் முடிந்ததும் இப்படம் திரைக்கு வரும் எனவும் படக்குழு தெரிவித்துள்ளது.




## விஜய் தேவரகொண்டா அறிவிப்பு.. ராஷ்மிகாவா.. சமந்தாவா..? குழப்பத்தில் ரசிகர்கள்

நடிகர் விஜய் தேவரகொண்டா இளம் நடிகராக வலம் வருகிறார். இவர் ராஷ்மிகாவை காதலிப்பதாக கிசுகிசுக்கப்பட்டது.

தெலுங்கு திரையுலகின் இளம் நடிகராக வலம் வரும் விஜய் தேவரகொண்டா 'அர்ஜுன்ரெட்டி' திரைப்படத்தின் மூலம் பிரபலமடைந்தார். இப்படம் வசூல் சாதனையை நிகழ்த்தியது. தொடர்ந்து இவர் நடிப்பில் வெளியான 'கீதா கோவிந்தம்' திரைப்படம் பல இளம் ரசிகைகளை கவர்ந்து. இப்படத்தில் ராஷ்மிகா விஜய் தேவரகொண்டாவின் நடிப்பு பெரிதும் பேசப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இவரும் காதலித்து வருவதாகவும் கிசுகிசுக்கப்பட்டது. ஆனால் இதற்கு இருவர் தரப்பில் இருந்தும் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. இந்நிலையில், நடிகர் விஜய் தேவரகொண்டா சமூக வலைதளப் பதிவை ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர். அதில், ஒரு ஆணும், பெண்ணும் கைக்கோர்த்திருக்கும் புகைப்படத்தை பகிர்ந்து 'நிறைய நடக்கிறது. ஆனால், இது உண்மையில் சிறப்பானது. விரைவில் அறிவிக்கிறேன்' என்று விஜய் தேவரகொண்டா குறிப்பிட்டுள்ளார். விஜய் தேவரகொண்டா பதிவு இதற்கு விஜய் தேவரகொண்டா தன் காதல் குறித்து அறிவிக்கவுள்ளதாக ரசிகர்கள் கமெண்ட் செய்து வருகின்றனர். ஆனால், அது ராஷ்மிகாவா? இல்லை சமந்தாவா? என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். 'குஷி' திரைப்படத்தின் போது சமந்தாவும் விஜய் தேவரகொண்டாவும் நெருக்கமாக பழகியதாக தகவல் பரவி வந்தது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் நடைபெறும் ஜவான் ப்ரீ ரிலீஸ் விழா.. ரசிகர்கள் உற்சாகம்

நடிகர் ஷாருக்கான் நடித்துள்ள திரைப்படம் 'ஜவான்'. இப்படத்தை இயக்குனர் அட்லீ இயக்கியுள்ளார்.



தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வரும் அட்லீ தற்போது இயக்கியுள்ள திரைப்படம் 'ஜவான்'. இதில் ஷாருக்கான் கதாநாயகனாக நடித்துள்ளார். நயன்தாரா கதாநாயகியாக நடிக்கும் இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் யோகிபாபு, தீபிகா படுகோனே, பிரியாமணி உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். இப்படத்தின் மூலம் பாலிவுட் பட உலகில் அனிருத் இசையமைப்பாளராக அறிமுகமாகியுள்ளார். பான் இந்தியா படமாக உருவாகியுள்ள 'ஜவான்' திரைப்படம் வருகிற செப்டம்பர் மாதம் 7ந்தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. ஜவான் போஸ்டர் இந்நிலையில், 'ஜவான்' படத்தின் ப்ரீ ரிலீஸ் விழா குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் ப்ரீ ரிலீஸ் விழா இன்று (ஆகஸ்ட் 30) சென்னை, சாய்ராம் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை பகிர்ந்து தெரிவித்துள்ளனர். இந்த அறிவிப்பால் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர

## ஆட்ட நாயகியாக மாறிய கங்கனா.. வைரலாகும் வீடியோ

சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகியுள்ள திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார்.




'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் பாடல்கள் வெளியாகி வைரலாகின. இந்த நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகி உள்ளது.

அதன்படி, 'சந்திரமுகி 2' திரைப்படத்தின் 'ஆட்டநாயகி' என்ற பாடல் தற்போது வெளியாகி உள்ளது. பாடலாசிரியர் மதன் கார்க்கி எழுதியுள்ள இந்த பாடலை ஸ்ரீநிதி திருமலா பாடியுள்ளார். இந்த பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.




## லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உலா வரும் விஜய்.. காரணம் இதுதான்

நடிகர் விஜய் 'லியோ' திரைப்படத்தில் நடித்துள்ளார். 'லியோ' திரைப்படம் அக்டோபர் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. நடிகர் விஜய் தற்போது இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'லியோ' திரைப்படத்தில் நடித்துள்ளார். திரைப்பிரபலங்கள் பலர் நடித்துள்ள இந்த திரைப்படம் அக்டோபர் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதைத்தொடந்து விஜய்யின் 68வது படத்தை இயக்குனர் வெங்கட் பிரபு இயக்குகிறார். கல்பாத்தி எஸ் அகோரம் சார்பில் ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இப்படத்தின் பணிகள் தொடக்க நிலையில் உள்ளன. இந்நிலையில், நடிகர் விஜய், லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையில் உள்ள புகைப்படம் இணையத்தை ஆக்கிரமித்துள்ளது. அதாவது, 'தளபதி 68' படத்தில் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளதாகவும் 3 டி விஎப்எக்ஸ் தொழில் நுட்பத்தில் விஜய்யின் தோற்றம் எடுக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த பணிக்காக விஜய், வெங்கட்பிரபு மற்றும் படக்குழுவினர் லாஸ் ஏஞ்சல்ஸ் சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சென்னை விமான நிலையத்தில் பிரக்ஞானந்தாவுக்கு பிரமாண்ட வரவேற்பு

உலகக்கோப்பை செஸ் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்று சாதனை அரசு சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது மேலும் படிக்க பிடே உலகக்கோப்பை செஸ் போட்டி அஜர்பைஜான் தலைநகர் பாகுவில் நடைபெற்றது. இதில் இந்திய 'இளம் புயல்' தமிழகத்தை சேர்ந்த பிரக்ஞானந்தாவும், 'நம்பர் ஒன்' வீரரும், 5 முறை உலக சாம்பியனுமான மாக்னஸ்கார்ல்செனும்(நார்வே) இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடத்தினர். டைபிரேக்கரில் கார்ல்சென் வெற்றி பெற்றார். இளம் வயதிலேயே சிறப்பாக விளையாடி 2வது இடம் பிடித்த 18 வயதாகும் பிரக்ஞானந்தாவுக்கு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர். தமிழக முதலமைச்சர் வாழ்த்து



தெரிவித்ததுடன், வீடியோ கால் மூலம் பேசி பாராட்டினார். அத்துடன் தமிழக விளையாட்டுத்துறை சார்பில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்படும் என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்த பிரக்ஞானந்தாவுக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை வரவேற்பதற்காக விளையாட்டுத்துறை செயலாளர் அதுல்யாமிஸ்ரா உள்ளிட்ட அதிகாரிகள் வந்திருந்தனர். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வீரர்கள், தனியார் பள்ளி மாணவர்களும் வரவேற்க திருண்டு இருந்தனர். மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற கிராமிய கலைகள் மூலம் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழகம் வந்தடைந்த பிரக்ஞானந்தா, இன்று முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்திக்க இருக்கிறார்.



## அமெரிக்க ஓபன் டென்னிஸ் மீண்டும் நம்பர் ஒன் இடத்தை பிடித்தார் ஜோகோவிச்

ஆண்டுதோறும் ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய 4 வகையான 'கிராண்ட்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான 143வது அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் கடந்த திங்கட்கிழமை தொடங்கி வருகிற 10ந்தேதி வரை நடக்கிறது. இந்நிலையில், முதல் நாளில் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் 23 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற சாதனையாளரான நோவக் ஜோகோவிச் (செர்பியா) 60,62, 63 என்ற நேர்செட்டில் 84ம் நிலை வீரரான அலெக்சாண்டர் முல்லெரை (பிரான்ஸ்) வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார். இந்த வெற்றியின் மூலம் 36 வயதான ஜோகோவிச், கார்லஸ் அல்காரஸ்சை (ஸ்பெயின்) பின்னுக்கு தள்ளி உலக ஒற்றையர் தரவரிசையில் மீண்டும் நம்பர் ஒன் இடத்தை பிடித்தார். இந்த போட்டி தொடரில் ஜோகோவிச் அடுத்த சுற்றில் தோற்றாலும் கூட முதல் இடத்திற்கு பிரச்சினை இல்லை.

## ஆசிய கோப்பை தொடரில் இருந்து வங்காளதேச வீரர் லிட்டன் தாஸ் விலகல்



வைரஸ் காய்ச்சலில் இருந்து முழுமையாக குணமடையவில்லை அனாமுல் ஹக் பிஜோய் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய ஆறு அணிகள் மோதும் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் இன்று தொடங்குகிறது. வங்காளதேசம் முதல் போட்டியில் நாளை இலங்கை அணியை எதிர்கொள்ள இருக்கிறது. இந்த நிலையில் வங்காளதேச அணியின் முன்னணி வீரரான லிட்டன் தாஸ் ஆசிய கோப்பைக்கான தொடரில் இருந்து முழுவதுமாக விலகியுள்ளார். வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள லிட்டன் தாஸ், இன்னும் அதில் இருந்து முழுமையாக குணமடையவில்லை. மேலும், இலங்கைக்கு எதிராக நாளை மோத இருக்கும் போட்டிக்காக இலங்கை செல்லவில்லை. அவருக்குப் பதிலாக அனாமுல் ஹக் பிஜோய் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என வங்காளதேச கிரிக்கெட் போர்டு தெரிவித்துள்ளது. அனாமுல் ஹக் 44 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 1254 ரன்கள் அடித்துள்ளார். இதில் மூன்று சதங்கள் அடங்கும். கடந்த 2022ம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக விளையாடியது அவரது கடைசி ஒருநாள் போட்டியாகும்.

## யு.எஸ். ஓபனில் மோசமான தோல்வியை சந்தித்தார் வீனஸ் வில்லியம்ஸ்

அமெரிக்க ஓபனில் இதுவரை 100 போட்டிகளுக்கு மேல் விளையாடியுள்ளார் இதுபோன்று மோசமான தோல்வியை எதிர்கொண்டது கிடையாது. அமெரிக்கா கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் சுற்றில் வீனஸ் வில்லியம்ஸ், இத்தொடருக்கான தரவரிசை பெறாத பெல்ஜியத்தை சேர்ந்த கிரீட் மின்னென்ஐ எதிர் கொண்டார். இதில் 43 வயதான வீனஸ்



வில்லியம்ஸ் 16, 16 எனத் தோல்வியடைந்தார். 2000 மற்றும் 2001ல் அமெரிக்கா கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற வீனஸ் வில்லியம்ஸ், 100 போட்டிகளுக்கு மேல் விளையாடியுள்ளார். அதில் இதுதான் மிகவும் மோசமான தோல்வியாக பார்க்கப்படுகிறது. வீனஸ் வில்லியம்ஸ் ஆட்டத்தை பார்க்க ஏராளமான ரசிகர்கள் வந்திருந்தனர். ரசிகர்களின் ஆதரவு குறித்து வீனஸ் வில்லியம்ஸ் கூறுகையில் ''ரசிகர்களின் ஆதரவை பார்ப்பது மிகவும் சிறப்பாக உள்ளது. எப்போதும் ரசிகர்கள் எனக்காக இங்கே வருவார்கள் என்பது எனக்குத் தெரியும். முன்னெப்போதையும் விட இன்னும் அந்த ஆதரவைக் கொண்டிருப்பது அருமையானது'' என்றார்.

## ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று முதல் தொடக்கம்




இந்த தொடரின் தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தான் நேபாளம் அணிகள் மோதுகின்றன. இந்திய அணி முதல் போட்டியில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று முதல் செப்டம்பர் 17ந்தேதி வரை இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடக்கிறது. இந்த போட்டியில், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம் உள்ளிட்ட 6 அணிகள் பங்கேற்கின்றன. இந்த தொடரின் தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தான் நேபாளம் அணிகள் மோதுகின்றன. இந்த போட்டி பாகிஸ்தானில் நடக்கிறது. இந்திய நேரப்படி இன்று மாலை 3 மணி அளவில் ஆட்டம் தொடங்குகிறது. மேலும், இந்திய அணி முதல் போட்டியில் பாகிஸ்தானை எதிர் கொள்கிறது. இந்த போட்டி 2ந் தேதி இலங்கையில் நடக்கிறது. இந்த போட்டியில் பங்கேற்கும் ரோகித் சர்மா ஷர்மா தலைமையிலான 18 பேர் கொண்ட இந்திய அணி சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.